ஆதிதிராவிடர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளர் அவர்களின் செயல்முறைகள்,
சென்னை–5

முன்னிலை: திருமதி வ.தமிழ்செல்வி

நாள்.03.04.2019.

ந.க.எண். இ5/20163/2017

பொருள்: ஆதிதிராவிடர் நலம்–பணியாளர் தொகுதி–தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2015–2016 ஆம் ஆண்டுக்குரிய இளநிலை உதவியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது–பணி நியமனம் செய்யப்பட்டது–பணிவரன்முறை செய்தல்–சார்பு.

பார்வை:
1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் கடித எண். 5816/PSD-C1/2017, நாள்.26.09.17.
2. இவ்வலுவலக செயல்முறைகள் எண்.இ5/20163/17, நாள். 09.10.17.
3. சம்மந்தப்பட்ட ஆவணங்கள்.

*****

<u>ஆணை:–</u>

பார்வை–1ல் கண்டுள்ள கடிதத்தின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்காணும் இளநிலை உதவியாளர்களுக்கு பார்வை–2–ல் காணும் செயல்முறைகளில் இத்துறையின் கீழ் பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து பணியில் சேர்ந்து பணிபுரிந்துவரும் 6 பணியாளர்களுக்கு பார்வை–1ல் கண்டுள்ள கடிதத்தில் பத்தி–5ல் பணிவரன்முறை செய்வது தொடர்பாக பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"The regularization is subject to the outcome of the WP's pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group-IV 2015-2016 recruitment" என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

தற்பொழுது இணைப்பில் கண்டுள்ள இளநிலை உதவியாளர்களுக்கு அவரவர்களுக்கு எதிரே கலம்–5ல் உள்ள பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்படி பணிவரன்முறை செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகால தொடர் பணியில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண்பருவத்தை திருப்திகரமாக முடித்திட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தகுதிகாண்பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறைநூல் தேர்வில் (DOM Test) தேர்ச்சி பெறுதல் மற்றும் பவானிசாகர் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியமாகிறது. இவர்களுக்கு தகுதிகாண்பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற்று வழங்கப்பட வேண்டும்.

இச்செயல்முறையினையும் சம்மந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டினையும் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலையும் உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் / பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு.
~~தொடர்புடையவரின் பணிப்பதிவேடு.~~

வ. தமிழ்ச்செல்வி 5/4/19
ஆதிதிராவிடர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளர்.

பெறுநர்.
சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள் (உரிய வழியாக).

நகல்.
1. சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
2. சம்மந்தப்பட்ட தலைமையாசிரியர்.
3. முக்கிய ஆணைத் தொகுப்பு.

இணைப்பு

நாள்.03.04.2019.

ந.க.எண்.இ5/20163/2017

**தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தொகுதி–IV–ல் (2015–2016 வரை) இளநிலை உதவியாளர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களில் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர்களின் பணிவரன்முறை பட்டியல்**

| வ. எண். | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் பரிந்துரைக்கப் பட்டவர்களது பெயர் திரு / திருமதி / செல்வி. | பதவி. | பணியமர்த்தப்பட்ட பணியிடம். | பணியில் சேர்ந்த நாள். | பணிவரன் முறை செய்யப்பட வேண்டிய நாள். |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையர் கடித எண். 5816/PSD-C1/2017, நாள்.26.09.17. | | | | | |
| 1. | திரு G.ரவி | இளநிலை உதவியாளர் | ஆதிதிராவிடர் நல இயக்குநரகம், சென்னை – 5. | 25.10.2017 முற்பகல் | 25.10.2017 முற்பகல் |
| 2. | திருமதி K.ஸ்யாமளா | இளநிலை உதவியாளர் | ஆதிதிராவிடர்நல இயக்குநரகம், சென்னை – 5. | 23.10.2017 முற்பகல் | 23.10.2017 முற்பகல் |
| 3. | திரு S.இசக்கிகுமார் | இளநிலை உதவியாளர் | ஆதிதிராவிடர்நல இயக்குநரகம், சென்னை – 5. | 01.11.2017 முற்பகல் | 01.11.2017 முற்பகல் |
| 4. | செல்வி V.சரஸ்வதி | இளநிலை உதவியாளர் | ஆதிதிராவிடர்நல இயக்குநரகம், சென்னை – 5. | 01.11.2017 முற்பகல் | 01.11.2017 முற்பகல் |
| 5. | திருமதி K.சௌமியாதேவி | இளநிலை உதவியாளர் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், கோயம்புத்தூர். | 09.10.2017 பிற்பகல் | 09.10.2017 பிற்பகல் |
| 6. | திருமதி S.ராமலலிதா | இளநிலை உதவியாளர் | டாக்டர் அம்பேத்கர் அரசு (ஆதிந) மேல்நிலைப்பள்ளி, நல்லம்மாள்புரம், திருநெல்வேலி மாவட்டம். | 29.11.2017 முற்பகல் | 29.11.2017 முற்பகல் |

[illegible] 5/4/19

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளர்.

2/14

[illegible] 5/4/19